தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 8, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, ஏப்ரல் 21, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று "

தன்னைத் தாங்கி நிற்கும் நிலத்தின் மீது ஒருவன் ஓங்கி அறைந்தால் கைக்குத்தான் கேடு விளையும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல ஒருவன் தன்னுடைய வீண் கோபத்தை மட்டுமே வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் அதுவே அவனுக்குக் கெடுதல் ஆகும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

கைக்குக் கேடு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். (சிரிப்பு)

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்--விடைகள். வினா எண் 381, திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

381—

கொல்லிமலையை தனி வட்டமாக்குதல்

24917*—திரு. கா. சின்னசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*1995 ஏப்ரல் 21*

கொல்லிமலையை தனி வட்டமாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் 50,000 மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கு ராசிபுரம், நாமக்கல் என்று இரு வட்டமாக உள்ளது. அந்த மலைவாழ் மக்கள் சான்றிதழ்கள் வாங்க 100 கிலோமீட்டர் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படிச் சென்றாலும் அங்கு அதிகாரிகள் இல்லாத நேரத்தில் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த் மலைவாழ் மக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த நிதி ஆண்டிலேயே கொல்லிமலையை தனி வட்டமாக அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மலைப்பகுதிகளை, அங்கு இருக்கிற மக்களுடைய நலன் கருதி, அதிலிருக்கிற வருவாயைக் கருதாமல், அங்கு இருக்கிற மக்கள் தொகையைக் கருதாமல், மலைப் பகுதிகளும் தனி வட்டமாகப் பல இடங்களிலே ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஆக்கப்படுகிறபோது கொல்லிமலை அதனுடைய கணக்கில் வரவில்லை. இப்பொழுதுதான் 15-12-1989ஆம் ஆண்டு நாமக்கல் என்ற வட்டத்தையும், ராசிபுரம் என்ற வட்டத்தையும், இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து புதிதாக பரமத்திவேலூர் என்ற ஒரு வட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். கொல்லிமலையைப் பற்றி, அங்குள்ள நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற போது மக்கள் மிக நீண்ட தூரம் வர வேண்டியிருக்கிறது என்று கூறி, ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். அது என்ன என்பதை வருவாய்த்துறை மூலமாக ஆராய ஏற்பாடு செய்கிறேன்.

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவி ஆட்சியில் புரட்சித் தலைவி அவர்கள் மலைவாழ் மக்களுக்கு என பல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். இந்த மலைவாழ் மக்களின் நலன் கருதி எவ்வளவு சட்டதிட்டங்கள்

1995 ஏப்ரல் 21]

இருந்தாலும், அவைகளை கொஞ்சம் தளர்த்தி இந்த கொல்லிமலையை தனி வட்டமாக இந்த ஆண்டிலேயே அறிவிக்க முழு முயற்சி செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி மலைவாசி மக்கள் மீது ஒரு தனி கண், சிறப்புக் கண் வைத்துள்ளது இந்த அரசு. அதை எண்ணிப்பார்த்து, அவைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆனால் இந்த ஆண்டே முடியுமா என்றால், அதை இந்த ஆண்டு முடிப்பதற்கு சங்கடமாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, ஆனால் எந்த அளவுக்கு ஆதரவாக செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 382, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

382—

அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்குதல்

*36023—**திரு இரா. அப்பு நடேசன்:***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் போதிய அளவு இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மருந்து இல்லாத குறையைப் போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் தேவையான உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தற்போது போதுமான அளவுக்கு கையிருப்பில் உள்ளன.